بسم الله الرحمن الرحيم

# ஜுமுஆ பேருரை

## *அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 17.04.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

---

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் துஆவின் முக்கியத்துவத்தை கூறிக் கொண்டிருந்தார்கள். எவ்வாறு துஆவின் மூலம் புதிய செயல் நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியும் ? என்று விளக்கம் தந்தவாறு அன்னார் மனோவசியம் அதாவது மெஸ்மரியம் பற்றி கூறினார்கள்.

எவர்கள் மனோவசியம் செய்யும் திறமை பெற்றிருக்கிறார்களோ அவர்கள் அந்த அறிவு மூலம் மக்களிடம் சில மாற்றங்களை ஏற்படுத்துகின்றனர். ஆனால் அவை தற்காலிகமானவையும் தனிப்பட்டவையாகவும் இருக்கின்றன. பிறகு அதனால் தனிப்பட்ட நன்மைகளும் கூட ஏற்படுவதில்லை. துஆவை அதற்குரிய நிபந்தனைகளுடன் செய்யப்பட்டால் சமுதாயங்களை அது புரட்டிப் போட்டு விடுகிறது. எவ்வாறிருப்பினும் இதன் விளக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சம்பவத்தை எடுத்துக் கூறுகிறார்கள். அது ஹஸ்ரத் சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் பற்றியதாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். மனோவசியம் என்றால் என்ன ? துஆ என்பது வானங்களையும் பூமியையும் மாற்றக்கூடிய ஆயுதம் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வாதத்தை தொடங்கக்கூட இல்லை. பராஹீனே அஹ்மதிய்யா மட்டுமே எழுதியிருந்தார்கள். அது சூஃபிகள் மற்றும் ஆலிம்கள் மத்தியில் பெரும் பிரபலம் கிடைத்து இருந்தது. சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்கள் உண்மையில் மிக இறையண்பு மிக்க பெரியவராக இருந்தார்கள். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பிரசுரம் படித்தார்கள். பிறகு அன்னாருடன் கடிதத் தொடர்பு கொண்டார்கள். தாங்கள் லூதியானாவுக்கு வருகை தந்தால் முன்னரே எனக்கு தகவல் தர வேண்டும் என்று தமது விருப்பத்தை தெரிவித்திருந்தார். தற்செயலாக அந்நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு லூதியானா செல்ல வாய்ப்பு கிடைத்தது. சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை விருந்துக்கு அழைத்தார். விருந்துக்கு பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவரது வீட்டிலிருந்து திரும்பிச் செல்லும் போது சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களும் பின் தொடர்ந்து சென்றார்கள்.

நான் இத்தனை வருடம் ரத்தர் சத்தர் காரரிடம் பணிவிடை செய்து வந்தேன். அதனால் எனக்கு எவ்வளவு சக்தி கிடைத்தது என்றால் பாருங்கள். என் பின்னால் வருகிற மனிதனின் மீது மனோவசியம் செய்து இப்போதே விழுமாறு விழுந்து விடுவார் என்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதை கேட்டவுடனேயே நின்று விட்டார்கள். தமது கைத்தடியின் முனையால் பூமியில் பதித்தவாறு கேட்டார்கள்.

அம்மனிதன் விழுந்து விட்டால் உங்களுக்கு அதனால் என்ன பயன் ஏற்படப் போகிறது ? அவருக்கு தான் என்ன பயன் ஏற்படப் போகிறது ? சூஃபி சாஹிப் யதார்த்தத்தில் அஹ்லுல்லாஹ் (அல்லாஹ்வைச் சார்ந்தவர்) ஆக இருந்ததால் அல்லாஹ் அன்னாருக்கு தொலைநோக்குப் பார்வையை தந்திருந்தான். அவர், நான் இன்றிலிருந்து இந்த நிலையை விட்டு தவ்பா செய்கிறேன். இது உலகியல் விஷயம் என்று எனக்கு தெரிந்து விட்டது. மார்க்க விஷயம் அல்ல.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் கூறியது போன்று அன்னாருக்கு தொலைநோக்குப் பார்வையை தந்திருந்ததால் இதற்று நம்மிடம் கூட ஓர் வியத்தகு ஆதாரம் உண்டு. அது என்னவென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா எழுதியிருந்தார்கள். அதை வைத்து அன்னார் மஸீஹாக ஆகப் போகிறார் என்று புரிந்து கொண்டார்கள். ஆனால் அவ்விஷயம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கூட தெரியப்படுத்தப்படவில்லை. அவ்வாறு தாம் வாதம் செய்யப்போகிறோம் என்று. இந்த வகையில் அன்னார் அதே நாட்களில் ஒரு கடிதம் மூலம் ஒரு கவிதையை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எழுதினார்கள். அந்த கவிதையை நான் முன்னரும் கூறி உள்ளேன்.

நோயாளியாக இருக்கின்ற எங்களுக்கு உங்கள் மீதே பார்வை இருக்கின்றது
நீங்கள் இறைவனுக்காக மஸீஹாக ஆகி விடுங்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அன்னார் ஆன்மீக காட்சிகளை உடையவர் என்பது இதிலிருந்து தெரிகிறது. இறைவன் அன்னாரிடம் இவர்கள் மஸீஹே மவ்வூது ஆக விருப்பவர் என்று கூறியிருந்தான். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய வாதத்திற்கு முன்பே வஃபாத் ஆகிவிட்டார்கள். ஆனால் தமது சந்ததிகளுக்கு அறிவுரை பகர்ந்து சென்றிருந்தார்கள். மிர்ஸா சாஹிப் வாதம் செய்தார்கள் எனில் ஏற்றுக் கொள்வதில் தாமதம் செய்யக்கூடாது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அவரது மகளுடன் திருமணம் நடந்தது. ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அன்னாரின் மருமகன் ஆவார்கள்.

பிறகு மனோவசியம் குறித்து ஒரு சம்பவம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சபையில் நடந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். எவ்வாறு அல்லாஹ் தஆலா தனது தேர்ந்தெடுக்கப்பட்டவரை மெஸ்மெரிஸம் செய்தவரை தோல்வி அடையச் செய்தான் என்பது மட்டுமல்லால் அடையாளமும் காட்டினான் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு முறை மஸ்ஜிது அக்ஸாவில் இருந்த போது ஓர் ஹிந்து லாஹூரில் ஏதோ அலுவலகத்தில் accountant ஆக இருந்தார். அம்மனிதர் மெஸ்மெரிசத்தில் பெரம் நிபுணராக இருந்தார். அவர் ஒரு திருமணக் குழுவுடன் காதியான் வந்தார். மிர்ஸா சாஹிபின் மீது நான் மனோ வசியம் செய்வேன். அவர் கூறுகிறார். அதன் மூலம் அவர் சபையில் இருந்தவாரே எனது மனோவசியம் மூலம் அவரை அவமானப்படுத்தி விடுவேன் என்று எண்ணம் கொண்டேன். இந்த வகையில் நான் ஒரு திருமணத்திற்காக காதியான் வந்தேன். அங்கு சபை நடந்து கொண்டிருந்தது. நான் அதில் வந்து அமர்ந்து அவர் மீது கவனத்தை செலுத்தத் தொடங்கினேன். அவர் புத்திமதிகள் போதனைகள் செய்து கொண்டிருந்தார். (அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்) கூறுகிறார். நான் அவர் மீது கவனத்தை செலுத்தினேன். அவரிடம் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. அவரது மனோ சக்தி கொஞ்சமும் அதிகம் போலும் என்று நினைத்துக் கொண்டேன். எனவே முன்னரை விட அதிகமாக கவனத்தை செலுத்தினேன். ஆனால் பிறகும் அவர்களிடம் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. அப்படியே தமது பேச்சில் மூழ்கியிருந்தார்கள். அன்னாரின் மனோ சக்தி இன்னும் அதிகமாக இருக்கிறது என்று கருதிக் கொண்டேன். எனவே நான் என் அறிவுக்கு பட்ட அனைத்தையும் அவரிடம் பயன்படுத்தினேன். எனது ஆற்றல் முழுவதையும் செலவழித்து விட்டேன். நான் எனது ஆற்றல் முழுவதையும் செலுத்திக் கொண்டிருக்கும் போது என் முன்னால் ஒரு சிங்கள் அமர்ந்திருப்பதை பார்த்தேன். என்மீது அது தாக்குவதற்கு நிற்கிறது. ஒவ்வொரு முறையும் நான் கவனம் செலுத்தும் போதும் சிங்கம் தென்பட்டது. கடைசி முறை நான் பயன்படுத்திய போது அந்த சிங்கள் என்னை தாக்குவதற்கு தயாராக நின்றது என்றும் கூறியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் அவர் கூறினார். நான் சிங்கத்திற்கு பயந்து எனது செருப்பை தூக்கிக் கொண்டு ஓடினேன். நான் வாசலை அடைந்ததும் மிர்ஸா சாஹிப் தமது சீடர்களிடம் அவர் யார் ? என்று பாருங்கள் என்று கூறினார். ஒரு நபர் என் பின்னால் வாசல்படி வழியாக இறங்கினார். பள்ளிவாசலை ஒட்டியுள்ள கடை வீதியில் என்னை பிடித்து விட்டார். நான் அப்போது எனது புலன்களை இழந்து விட்டதால் நான் அவரிடம் கூறினேன். இப்போது என்னை விட்டு விடுங்கள். எனது புலன்கள் சரியாக இல்லை. நான் பிறகு எனது எல்லா சம்பவத்தையும் மிர்ஸா சாஹிபிற்கு எழுதுவேன். இவ்வாறு அவர் விடப்பட்டார். பிறகு அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இந்த எல்லா சம்பவங்களையும் எழுதினார். கூறினார். என்னிடம் தவறு ஏற்பட்டு விட்டது. தங்களது தகுதியை என்னால் விளங்க முடியாமற் போய்விட்டது. எனவே என்னை மன்னித்து விடுங்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். எந்த மனோசக்தி முழுமையான ஈமானுக்குப் பிறகு பிறக்கின்றதோ அது இறைவன் புறமிருந்து மனிதனுக்கு தரப்படுகிறது.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் சமுதாய முன்னேற்றத்திற்கு தேவையானவை என்ன ? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய மார்க்கத் தன்மான உணர்வு எவ்வாறு இருந்தது ? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விஷயத்தில் அவ்வுணர்வு எவ்வாறு இருந்தது என்பது பற்றி கூறுகிறார்கள்.

சமுதாய முன்னேற்றத்திற்கு அவசியம் எல்லா உண்மையையும் தமக்குள் ஈர்த்துக் கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியமான ஒன்றாகும். மாறாக, மஸீஹின் மரண விஷயத்தை மட்டும் ஏற்றுக் கொள்வது போதமானதல்ல. மாறாக, மஸீஹின் மரணத்தை ஏற்றுக் கொள்வத ஏன் அவசியம் ? மஸீஹின் ஜீவித விஷயத்தில் மறைந்துள்ள விஷயம் என்ன? ஒன்று இந்த கொள்கையினால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை விட மேன்மையானவர் என்று நிரூபணம் ஆகிறது. ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மகிமைக்கு ஈடான ஒரு நபி வரவும் இல்லை. வரப்போவதும் இல்லை. மஸீஹின் ஜீவிதத்தை நம்புவதால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மீதும், முழு உலகின் மீது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மேன்மையே உறுதி செய்யப்படும். இது இஸ்லாமிய கொள்கைக்கு எதிரானது.

நமக்கு ஈஸா நபியின் ஜிவிதக் கொள்கையை நம்புவதில் உள்ள நெருடல் என்னவென்றால் இறைவனின் ஏகத்துவத்திறக்கே பங்கம் ஏற்படுகிறது. இந்த இரு காரணங்களால் தான் நாம் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதற்கு அழுத்தம் தர வேண்டியுள்ளது. இது மட்டும் இல்லையெனில் மஸீஹ் வானத்தில் இருந்தாலும் பூமியில் இருந்தாலும் அதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம் ? அவர் வானத்திற்கு ஏறுவது ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மற்றும் இஸ்லாத்திற்கு இழிவு ஏற்பட காரணமாக அமைகிறது. அது ஏகத்துவத்திற்கு எதிரானதாகும். இத்தகைய கொள்கையை நாம் எப்படி சகிக்க முடியும்.

நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்துள்ளோம். மஸீஹின் மரணத்தைப் பற்றி எடுத்தால் அப்போது ஆவேசத்தின் காரணத்தால் துடிதுடித்தவர்களாக ஆகிவிடுவார்கள். அன்னாரின் குரலில் எவ்வளவு கம்பீரம் ஏற்படும் எனிடில அன்னார் மஸீஹின் ஜீவிதக் கொள்கையை துண்டு துண்டாக்கிறார்கள் போன்று தெரிய வரும். அவர்களின் நிலையே முற்றிலும் மாறி விடும். அன்னார் இந்த சொற்பொழிவு ஆற்றும் போது அன்னாரின் குரலில் ஒரு

பிரதியே ஆவேசம் தென்படும். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அரியணையில் மஸீஹ் உட்கார்ந்திருக்கிறார்கள். அன்னாரின் கண்ணியத்தை பறித்துக் கொண்டிருக்கிறார். அதனை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களிடம் திருப்பித் தர விரும்புகிறார்கள் போன்று தோன்றும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ரோஷம்.

அல்லாஹ் தஆலா ஒருவரை ஒரு உயர்ந்த அந்தஸ்தில் நிறுத்தும் போது இந்த மக்களைப் பற்றி அன்னார் எவ்வாறு அல்லாஹ் அம்மக்களுக்கு வழிகாட்டுகின்றான். மேலும் அம்மக்களின் அகத்தை வெளிப்படுத்துகிறான். இதுபற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

மனிதன் அத்தகைய இடத்தில் நிற்கும் போது அதாவது ஒரு மனிதனை அல்லாஹ் உயர்ந்த இடத்தில் நிற்க வைக்கும் போது அல்லாஹ்வின் தரப்பில் இருந்து சுயமே வழிகாட்டலும் தரப்படுகிறது. அவருக்கு அத்தகைய திடமான வழிகாட்டல் கிடைக்கிறது என்றால் அதனை இல்ஹாம் என்றும் கூற முடியாது. அது குறித்து அது இல்ஹாமல்லாத தனிப்பட்ட விஷயம் என்றும் கூற முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். பெரும்பாலான மக்கள் என் முன்னால் வருகின்றனர். அவர்களின் உள்ளத்திலிருந்து ஒளிப்பிழம்பு ஒன்று எனக்கு காட்டப்படுகிறது. அதன் மூலம் அவர்களிடம் இன்னின் குறையிருக்கிறது அல்லது இன்னின்ன நிறையிருக்கிறது என்று தெரிய வருகிறது. ஆனால், அந்த குறையை அவரிடம் தெரிவிப்பதற்கு அனுமதியில்லை. அல்லாஹ் தஆலாவுடைய நடைமுறையாவது மனிதன் சுயம் தானே தனது இயல்பை வெளிப்படுத்தாத வரை அவரை குற்றவாளியாக்குவதில்லை. அந்த சுன்னத்தின் கீழ் நபிமார்கள் மற்றும் பின்தொடர்பவர்களில் கூட இந்த நடைமுறை உண்டு. ஒரு மனிதரின் அந்தரங்க குறையை அவர் சுயமே வெளிப்படுத்தாதவரை அதனைப் பற்றி குறிப்பிடுவதில்லை.

1904 – ல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் லாஹூருக்கு வருகை தந்த போது ஒரு மாநாட்டில் அன்னார் சொற்பொழிவாற்றினார்கள். அஹ்மதியல்லாத நண்பரான ஷேக் ரஹ்மதுல்லாஹ் சாஹிப் வக்கீல் அவர்களும் அங்கு இருந்தார். அவர் கூறுகிறார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய தலையிலிருந்து ஒளியின் தூண் ஒன்று வெளிப்பட்டு வானத்தை நோக்கி செல்கிறது. எனக்கு அருகில் இன்னொரு நண்பரும் இருந்தார். நான் அவரிடம் பாருங்கள். இது என்ன விஷயம் ? என்று கூறினேன். உடனே அம்மனிதர் கூறினார். இது ஒரு ஒளித் தூண் ஆகும். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபின் தலையில் இருந்து வெளிப்பட்டு வானம் வரை செல்கிறது. இந்த காட்சியினால் ஷேக் ரஹ்மதுல்லாஹ் சாஹிபிடம் எத்தகைய தாக்கம் ஏற்பட்டது என்றால் அதே நேரம் அதே நாளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்து விட்டார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஒரு சபையின் சம்பவத்தை கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். ஒரு நண்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய சமூகத்தில் எழுதினார். எனது சகோதரியிடம் ஜின் வருகிறது. அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடிதம் எழுதினார்கள். நீங்கள் அந்த ஜின்களிடம் இந்த செய்தியை கூறுங்கள். ஏன் ஒரு பெண்ணை துன்பப்படுத்துகிறீர்கள். மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி, மவ்லவி ஸனாவுல்லாஹ்வை போய் துன்புறுத்து வேண்டியது தானே ? ஒரு ஏழைப் பெண்ணைப் போய் கஷ்டப்படுத்தி என்ன பயன் ?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய அடையாளங்கள் அற்புதங்கள் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். அவற்றிலிருந்து சிலவற்றை எடுத்து வைக்கிறேன்.

உதாரணமாக நாம் அப்துல் கரீம் என்ற ஒரு சாஹிபின் சம்பவத்தை எடுத்து வைக்கிறேன். அவர் காதியான் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தார். தற்செயலாக அவரை ஒரு வெறிநாய் கடித்து விட்டது. சிகிச்சைக்காக அவரை கசோலிக்கு அனுப்பப்பட்டது. வெளிப்படையில் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. திரும்பி வந்த சில நாட்களுக்குப் பிறகு அவருக்கு மீண்டும் நோயின் தாக்கம் ஏற்பட்டது. உடனே கசோலிக்கு தந்தி கொடுக்கப்பட்டது. உடனே ஏதாவது சிகிச்சை கூறுங்கள் என்று ஆனால் பதில் வந்தது. Nothing can be done for Abdul karim வருந்துகிறோம். அப்துல் கரீமுக்காக எந்த சிகிச்சையும் செய்ய முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அவரது நோய் பற்றி தெரிவிக்கப்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு மிகவும் அனுதாபம் ஏற்பட்டது. அவரது உடல் நலத்திற்காக அன்னார் குறிப்பாக துஆ செய்தார்கள்.

எவ்வாறிருப்பினும் இந்த துஆக்கான விளைவு எவ்வாறாயிற்று எனில் மீண்டும் நோய் வந்த பிறகும் அவருக்கு அல்லாஹ் உடல்நடலத்தை வழங்கினான். ஆனால் மனிதன் பிறந்ததில் இருந்து இதற்கு நிவாரணம் கிடைத்ததில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அமெரிக்காவிலிருந்து இரு ஆண்களும் ஒரு பெண்ணும் வந்திருந்தனர். அதில் ஓர் ஆண் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதத்தைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருந்தார். உரையாடலுக்கு இடையில் மஸீஹ் நாஸிரி (அலை) அவர்களைப் பற்றி பேச்சு வந்தது. அம்மனிதர் கூறினார். அவர் இறைவனாக இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அவர் இறைவன் என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரம் உள்ளது. அவர் அற்புதம் காட்டியுள்ளார் என்று அம்மனிதர் கூறினார். அன்னார் கூறினார்கள். அற்புதம் நானும் தான் காட்டுகிறேன். அவர், எனக்கும் ஓர் அற்புதம் காட்டுங்கள் என்றார். நீங்களே

என்னுடைய ஒரு அற்புதம் தான் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். கேள்வி கேட்ட அந்த அமெரிக்கர் வியப்படைந்தார். நான் எவ்வாறு அற்புதம் ஆவேன் ? அன்னார் கூறினார்கள். காதியாம் மிகவும் சின்னஞ்சிறிய அறியப்படாத ஊராக இருந்தது. சாதாரணமான உண்ணக்கூடிய பொருள் கூட இங்கு கிடைக்காததாக இருந்தது. ஒரு ரூபாய்க்கு மாவு கூட இங்கு கிடைக்காது. அந்த நிலையில் இறைவன் எனக்கு தெரிவித்தான். நான் உனது பெயரை உயர்த்துவேன். முழு உலகிலும் உன்னை பிரபலப்படுத்துவேன். நாலா புறமிருந்தும் மக்கள் உன்னை தேடி வருவார்கள். அவர்களுக்கு தங்கவும் பயன்படுத்தவும் இங்கு வசதிகள் ஏற்படுத்தப்படும். يَأْتُونَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيقٍ எல்லா நாட்டின் மக்களும் உம்மிடம் வருவார்கள். يَأْتِيكَ مِنْ كُلِّ فَجٍّ عَمِيقٍ எந்த அளவுக்கு வருவார்கள் எனில் அவர்கள் வருவதால் பாதை பழுதுபட்டுவிடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள். எனது உண்மைக்காக இலட்சக்கணக்கான அடையாளங்கள் காட்டப்பட்டுள்ளன. ஆனால் நான் கூறுவேன். எவ்வளவு அடையாளங்கள் காட்டப்பட்டுள்ளனவோ அதனை எண்ணவே முடியாது. பிறகும் கூட பெரும்பாலான அறிவற்றவர்கள் இவ்வளவு இல்ஹாம் கூட மிர்ஸா சாஹிபுக்கு இறங்கியிருக்காது. பிறகு அடையாளம் எவ்வாறு அந்த அளவுக்கு இறங்கி விட்டது என்று கேட்பர். ஆனால் அறிவும் புரியும் திறனும் கொண்ட மனிதர் விளங்க முடியும். இலட்சக்கணக்கான அடையாளங்கள் ஒரு இல்ஹாம் மூலம் கூட வெளிப்பட முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எனது உண்மைக்காக இறைவன் இலட்சக்கணக்கான அடையாளங்களை காட்டி உள்ளான். இது முற்றிலும் சரியாகும்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ் தஆலா எவ்வளவு அடையாளங்களை காட்டியுள்ளானோ அதனை எண்ணவும் முடியாது. ஆனால் யாருக்கு அறிவு இருக்கிறதோ அவர்களுக்கு தான் அந்த அடையாளங்கள் காட்டப்பட்டது.

இன்றும் கூட காதியானின் முன்னேற்றம் இதற்கு ஓர் ஆதாரமாகும். இப்போதும் கூட மக்கள் காதியானுக்கு போகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஊர் என்பதற்காக செல்கின்றனர். இது ஓர் ஊர். எல்லா ஊர்களும் போன்று. குடியேற்றம் அதிகமாகிறது. வளர்ந்துள்ளது என்பதற்காக வரவில்லை. அல்லது ஊர் பரவிவிட்டது என்பதற்காக வரவில்லை. இங்கு வியாபாரிகள் கூட இங்கு மாநாடு நடைபெறும். அதன் மூலம் நமது வியாபாரம் நடக்கும் என்ற நம்பிக்கையில் தான் கடை வைத்துள்ளார்கள். பொருளாதார ரீதியில் மற்றவர்களுக்கு முன்னேற்றம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காரணத்தால் ஏற்படுகிறது.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தைக் கேட்டு மக்கள் அன்னாரிடம் வந்தார்கள். அவர்களும் கூட பயன் பெற்றனர்.

لا يشقى جليسهم என்பதன் காரணத்தால் அவர்களுக்கும் அருள் கிடைத்தது. இவை அனைத்தும் அன்னாரின் உண்மைக்கு அடையாளமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். ஒரு மவ்லவி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் வந்து நான் உங்களிடம் ஓர் அடையாளத்தை பார்க்க வந்துள்ளேன் என்று கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சிரித்தவாறு கூறினார்கள். மியான் நீங்கள் முதலில் எனது ஹகீகதுல் வஹீ என்ற நூலைப் பாருங்கள். எனக்கு ஆதரவாக இறைவனை எவ்வளவு அடையாளங்கள் தந்துள்ளான் என்று. அதிலிருந்து நீங்கள் என்ன பயனடைந்தீர்கள். இப்போது இன்று ஒரு அடையாளம் பார்க்க வந்துள்ளீர் ?

அவர் செய்யும் முன்னறிவிப்பு 2அல்லது 5 நிமிடங்களில் நிறைவேறிவிட்டால் பிறகு இரண்டு வருடங்கள் என்ன 200 வருடங்களுக்குப் பிறகு நிறைவேற இருக்கும் முன்னறிவிப்பை கூட நாங்கள் ஏற்றுக் கொள்வோம். பிறகு நாங்கள் 2,3 அல்லது 5 நிமிடங்களில் நிறைவேறிய முன்னறிவிப்பையும் கண்டோம். எனவே நீண்ட காலகட்டத்திற்குப் பிறகு நிறைவேற இருக்கும் இந்த முன்னறிவிப்புகளும் நிச்சயமாக நிறைவேறும் என்று நாங்கள் கூறுவோம். எதாவது ஒரு நபர் இதுபோன்ற முன்னறிவிப்புகள் நிறைவேறுவதை காட்டாத வரை இந்த விஷயம் அறிவுக்கு மாற்றமானது என நாங்கள் கூறுவோம்.

ஆகவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவ்ரகளுடைய முன்னறிவிப்புகள் அவர்களது காலத்திலலேயும் நிறைவேறியது. இதுவரை நிறைவேறிக் கொண்டும் இருக்கிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று ஜமாஅத்தின் ஒவ்வொரு நாளும் பெறுகின்ற வளர்ச்சி அதற்கு ஆதாரமாகும். அல்லாஹ் தஆலா இந்த முன்னறிவிப்புகள் எவ்வாறு நிறைவேறுகின்றனவோ அதனை காண முடியாதவர்களுக்கும் கண்ணைத் தந்து காணச் செய்வானாக. நாமும் நமது ஈமானில் ஒவ்வொரு வினாடியும் ஈமானில் முன்னேறிக் கொண்டு செல்லச் செய்வானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 17.04.15
Tamil Translation : Muallim. M. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha’ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516